**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.27/2020** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W.5** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | லோகநாதன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.02.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். மார்க்கெட்டில் காய்கறி கடை வைத்துள்ளேன். வழக்கு எதிரிகளை பார்த்துள்ளேன். வழக்கில் இறந்துபோன வீரமணிகண்டனை தெரியும். கடந்த 07.06.2020ம் தேதி நான், ராஜா, ஈசாக், சித்திக் ஆகியோர்கள் BC Hostelலில் சீட்டு விளையாடி கொண்டிருந்தோம். அப்போது இரவு சுமார் 08.30 மணிக்குமேல் இருக்கும். இருட்டாக இருந்தது. பசங்களுக்குள் பிரச்சனை வந்தது. ஒருத்தருக்கொருத்தர் அடித்துகொண்டார்கள். இருட்டில் யார் என்று தெரியவில்லை. அதன்பிறகு நடந்தது எனக்கு ஞாபகமில்லை. எப்படி வந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. வீரமணிகண்டன் காம்மோண்ட் சுவர் ஏறி குதித்தார். நான் உள்ளே இருந்தேன். காம்போண்ட் சுவர் உயரமாக இருந்ததால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். உடைமாற்றி விட்டு மீண்டும் சென்றபோது போலிசார் விசாரித்தார்கள். வீரமணிகண்டன்

கொலை செய்தது பற்றி விசாரித்தார்கள். யார் கொலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

கடந்த 07.06.2020ம் தேதி நான், ராஜா, ஈசாக், சித்திக், வீரமணிகண்டன் ஆகியோர்கள் சீட்டு விளையாடி கொண்டிருந்தோம். சந்தோஷ்குமார் அங்கிருந்தாரா என்று தெரியவில்லை. ஆனந்த் (எ) முருகானந்தம், பார்த்தா (எ) பார்த்திபன், டால்டாகண்ணன், அய்யனார் ஆகியோர்கள் அய்யனார் மோட்டார்சைக்கிளை ஓட்ட மற்றவர்கள் அதே மோட்டார்சைக்கிளில் வந்ததாக போலிசார் விசாரணையின் போது சொன்னேன். அப்போது ஆனந்த (எ) முருகானந்தம் வீரமணிகண்டனை பார்த்து ஏண்டா டிஸ்பிளை போன செல்லை கொடுத்துவிட்டாய் என்று தேவுடியா பயலே என்று திட்டினார் என்றால் சரிதான். வேறசெல்லும் மாற்றி தரமாட்டிகிறாய், பணமும் தரமாட்டிங்கிறாய் என்று சொல்லி அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது வீரமணிகண்டன் பணமும் தரமுடியாது, செல்லும் தரமுடியாது, உன்னால் ஆனதை பார்த்துகொள் என்று சொன்னார் என்றால் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள் அதன்பிறகு எனக்கு சரியாக ஞாபகமில்லை. அப்போது பார்த்தா (எ) பார்த்திபன் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து வீரமணிகண்டனின் தலையின் பின்பக்கம் வெட்டினார் என்றும், வீரமணிகண்டன் ஓடி காம்போண்ட் சுவரை தாண்டும்போது அந்த அரிவாளை வாங்கி டால்டாகண்ணன் தலையில் வெட்டியதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஞாபகமில்லை. வீரமணிகண்டன் காம்போண்ட் ஏறி குதித்தபின்னர் முருகானந்தம் (எ) ஆனந்த் கையில் வைத்திருந்த பட்டா கத்தியால் அவருடைய கழுத்தை அறுத்தார் என்று போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் ஞாபகமில்லை. காம்போண்ட் சுவருக்கு அந்த பக்கம் நடந்தது எனக்கு தெரியவில்லை. ஆஸ்டலில் உள்ளே இருந்து கேட்

வழியாக பார்த்தால் வெளியே நடக்கும் விவரம் தெரியுமென்றால் சரியல்ல. கழுத்தை அறுத்த பின்னர் அய்யனார் மோட்டார்சைக்கிளை எடுத்து சென்றுவிட்டார் என்றும், மற்ற 3பேர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும் நான் சத்தம்போட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்காக வீரமணிகண்டனை தூக்கிபார்க்கும்போது அவருக்கு உயிர் இல்லை என்று தெரிந்தது என்றும், அதற்குள் ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஞாபகமில்லை. எதிரிகளை எனக்கு நீண்ட நாட்களாக பழக்கம் என்றும், நாங்கள் ஒரே பகுதியில் வசிக்கிறோம் என்றால், ஒரே பகுதியில் வசிக்கிறோம் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனக்கு நன்கு பழக்கம் என்பதால் தற்போது எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருட்டாக இருந்தால் சீட்டு விளையாட முடியாது என்றால் செல்போன் டார்ச் வெளிச்சத்தில் விளையாடினோம். அந்த BC Hostel அரசு Hostel ஆகும். அருகில் பெரிய ஆஸ்பத்திரி, அங்காயி கோவில் உள்ளதால் அந்த பகுதியில் பொதுவாக ஜனநடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். பெரியஆஸ்பத்திரிக்கும் BC Hostelக்கும் மையத்தில் உள்ள சாலையில் பெரிய High Mass Light நான்கு பக்கம் வெளிச்சம் வரும் அளவிற்கு உள்ளது என்றால் சரிதான். அதே ரோட்டில் உள்ள கல்லறைதோட்டம், அருகில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் வெளிச்சம் இருக்கும் என்றால் சரிதான். அங்காயிகோவில் அருகில் உள்ள தனியார் கல்யாணமண்டபத்தில் எப்போதும் விளக்கு வெளிச்சம் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. சம்பவஇடத்தில் நாலாபக்கமும் வெளிச்சம் இருந்தது என்றும், நான்கூறுவது போன்று அது இருட்டான பகுதி இல்லையென்றால் நாங்கள் இருந்த இடத்தில் இருட்டாக இருந்தது.

**1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

BC Hostelக்கு வாடன் மற்றும் வாட்ச்மேன் உண்டு என்றால் இருப்பார்கள், எனக்கு தெரியவில்லை. 07.06.2020ம் தேதி இரவு அந்த விடுதியில் வாடன் மற்றும் வாட்ச்மேன் இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. விடுதியின் கதவு பூட்டப்பட்டு இருந்ததா என்று எனக்கு தெரியாது. விடுதியின் முன்புறம் குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். ஆஸ்டல் பின்புறம் நாங்கள் எப்படிபோனோம் என்றால் சுவர் ஏறி குதித்து போனோம். ஆஸ்டல் சுவர் உயரமான சுவர் என்றும், அதில் ஏறி குதிக்க முடியாது என்றால் உள்ளே இருந்து ஏறிகுதிப்பது சிரமம், வெளியே இருந்து ஏறிகுதிக்க முடியும். பிரச்சனை ஆனவுடன் சீட்டுகட்டுகளை அங்கேயே போட்டுவந்துவிட்டோம். நாங்கள் சீட்டு விளையாண்ட இடத்தில் மின்சார வெளிச்சம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக ஆஸ்டல் அருகில் வைத்து அன்றே என்னை போலிசார் விசாரித்தார்கள். நேரம் ஞாபகமில்லை. போலிசார் விசாரணையில் அன்று இருட்டாக இருந்தது, யார் யாரை அடித்துகொண்டாகள் என்று எனக்கு தெரியவில்லை என்று போலிசார் விசாரணையில் சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கும்போது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் நிறைய கும்பலாக இருந்தார்கள். யார் யார் என்று தெரியவில்லை. எனக்கு வழக்கு சம்பவம் எதுவும் தெரியாது என்றும், போலிசாருக்கு பயந்துகொண்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணையின்போது சாட்சியம் அளித்துள்ளேன் என்றால்சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்துக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

**4வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை**

இறந்துபோன வீரமணிகண்டன் என்னுடைய அம்மாவின் அண்ணன் மகனாவர்.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.